# நடப்பு நிகழ்வுகள்

**1.** சில்லு வடிவமைப்புகளை ஊக்கப்படுத்துவதற்காக “Fabless சில்லு வடிவமைப்பு காப்பகம்” என்ற ஒரு பிரத்யேக காப்பகத்தை தொடங்கியுள்ள ஐஐடி நிறுவனம் எது?

[A] ஐஐடி மெட்ராஸ்

[B] ஐஐடி பாம்பே

[C] ஐஐடி ஹைதராபாத்

[D] ஐஐடி டெல்லி



- ✓ சில்லு வடிவமைப்புகளை ஊக்கப்படுத்துவதற்காக “Fabless சில்லு வடிவமைப்பு காப்பகம்” என்ற ஒரு பிரத்யேக காப்பகத்தை ஹைதராபாத் இந்திய தொழில்நுட்ப நிறுவனம் தொடங்கியுள்ளது. இதன் வகையில் நாட்டிலேயே முதன்மையாக திகழும் இந்தக் காப்பகம், சில்லு வடிவமைப்பில் ஈடுபடும் துளிர் நிறுவனங்களுக்கான சூழலை உருவாக்குவதில் தனது கவனத்தை செலுத்தும்.
- ✓ இந்தக் காப்பகத்தின் நோக்கம், பன்னாட்டளவில் போட்டியிடக்கூடிய மற்றும் அறிவுசார் சொத்து உரிமைகளை உருவாக்கக்கூடிய குறைந்தது ஐம்பது ‘இந்தியாவில் தயாரிப்போம்’ சில்லு வடிவமைப்பு (Chip Design) நிறுவனங்களை உருவாக்குவதாகும். இது DC & RF பண்புருக்களை செயல்படுத்தும் கருவியையும், சில்லுகளை சோதிக்க உதவும் Electronic Design Automation (EDA) மென்பொருள் தொகுப்பையும் வழங்குகிறது.
- ✓ மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழினுட்ப அமைச்சகம் FabCI-க்கு நிதியுதவி அளிக்கிறது. Cadence Design Systems மற்றும் Mentor Graphics ஆகிய நிறுவனங்கள் இதன் தொழினுட்ப பங்காளர்களாக உள்ளன. இந்தக் காப்பகம், ஹைதராபாத்தை சேராதவர்களுக்கான மெய்நிகர் ஆதரவையும் வழங்குகிறது. அது தொலைதூரத்திலிருந்து பங்கேற்க உதவுகிறது.

**2.** 18வது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில், பெண்கள் ஒற்றையர் பிரிவில் வெண்கலத்தை வென்ற இந்திய பெண் டென்னிஸ் வீராங்கனை யார்?

[A] N. சிக்கி ரெட்டி

[B] அஷ்வினி பொன்னப்பா

[C] அங்கிதா ரெய்னா

[D] கர்மன் கௌர் தண்டி



- ✓ ஆகஸ்ட் 23 அன்று நடந்த ஜாகர்த்தா ஆசியப்போட்டிகளில், டென்னிஸ் பெண்கள் ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா, சீனாவின் சாங் சுவாயிடம் 6-4, 7-6 என நேர் செட்களில் போராடி தோல்வியடைந்து வெண்கலம் வென்றார்.
- ✓ ஆசிய விளையாட்டுக்களில் சானியாவுக்கு பின் பெண்கள் ஒற்றையர் பிரிவில் பதக்கம் வெல்லும் 2வது பெண் அங்கிதா. இந்தியாவுக்காக 2006-ல் தோஹாவில் நடந்த போட்டியில் வெள்ளியும், 2010-ல் குவாங்சௌவில் நடந்த போட்டியில் வெண்கலமும் சானியா மிர்சா வென்றார்.

**3.**2018 இந்திய வங்கித்துறை மாநாடு நடைபெற்ற நகரம் எது?

[A] சென்னை

[B] புது டெல்லி

[C] இந்தூர்

[D] புனே




- ✓ இந்திய வங்கித்துறை சந்தித்து வரும் பல்வேறு முக்கியப் பிரச்சனைகள் குறித்து ஆராய்வதற்காக ஆகஸ்ட் 23 அன்று புது டெல்லியில் இந்திய வங்கித்துறை மாநாடு நடைபெற்றது.
- ✓ NITI ஆயோக்கும், பொருளாதார கொள்கை ஆராய்ச்சி மையமும் இணைந்து இந்த மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளன. இந்தியாவின் வங்கி மற்றும் நிதித்துறைசார் பல்வேறு பங்குதாரர்களுக்கு இம்மாநாடு ஒரு முக்கிய தளமாக உள்ளது. துறைக்கு நன்மை பயக்கக்கூடிய ஒவ்வோர் அம்சமும் இம்மாநாட்டின் போது விவாதிக்கப்பட்டது.

**4.**அண்மையில் 'Making India 5G Ready' என்ற அறிக்கையை அரசாங்கத்திற்கு சமர்ப்பித்த வழிநடத்தும் குழுவிற்கு தலைமை வகித்தவர் யார்?

[A] அருணா சுந்தர்ராஜன்

[B] வினோத் தாடே

[C] வாகர் அலி

[D] AJ பால்ராஜ்



- ✓ ஸ்டான்போர்டு பல்கலைக்கழக பேராசிரியர் AJ பால்ராஜ் தலைமையிலான 9 பேர்கொண்ட 5G வழிநடத்தும் குழுவானது தனது ‘Making India 5G Ready’ என்ற அறிக்கையை தொலைத்தொடர்பு துறை செயலர் அருணா சுந்தர்ராஜனிடம் சமர்ப்பித்தது.

- ✓ ஸ்பெக்ட்ரம் தொழினுட்பத்திற்கான உட்கட்டமைப்பை நிர்வகிப்பதற்கு ஆலோசனைக் குழுவை அமைத்து, மத்திய அரசு டிசம்பர் 31-ம் தேதிக்குள் 5G கொள்கையை அறிவிக்க வேண்டும் என்று இந்த அறிக்கை பரிந்துரைத்துள்ளது.

- ✓ ஸ்பெக்ட்ரம் கொள்கை; ஒழுங்குமுறைக் கொள்கை; கல்வி மற்றும் விழிப்புணர்வு ஊக்குவிப்பு; பயன்பாடு மற்றும் பயன்பாட்டு ஆய்வகங்கள்; சர்வதேச தரங்களை பின்பற்றுதல்; பயன்பாட்டு அடுக்கின் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் முக்கிய 5G பரிசோதனைகளை மேற்கொள்ளுதல் உள்ளிட்ட முக்கிய பரிந்துரைகள் மற்றும் செயல்திட்டங்களை இவ்வறிக்கை கொண்டுள்ளது. 20–20 வாக்கில் இந்தியாவில் 5G வணிகரீதியாக பயன்பாட்டுக்கு வருமென எதிர்பார்க்கப்படுகிறது.

**5.** வரும் செப்டம்பரிலிருந்து, எந்த உயிர்காக்கும் மருந்தின் மீதான சில்லறை விற்பனை தடையை நீக்க அரசு முடிவு செய்துள்ளது?

[A] நையலாமைட்

[B] மெட்ஃபோர்மின்

[C] ஆக்சிடோசின் (Oxytocin)

[D] சைக்ளோஸ்போரின்




- ✓ 2018 ஜூலை மாதத்திலிருந்து ஆக்சிடோசின் மருந்தின் மீது இருந்துவரும் சில்லறை விற்பனை தடையை, வரும் செப்டம்பர் 1-லிருந்து நீக்குவதென சுகாதாரம் மற்றும் குடும்ப நலன் அமைச்சகம் முடிவுசெய்துள்ளது. அதேசமயம், இம்மருந்தை உற்பத்தி செய்யும் ஏகபோக உரிமை Karnataka Antibiotics & Pharmaceuticals நிறுவனத்துக்கு மட்டுமே உள்ளதென மத்திய அரசு கூறியுள்ளது.

- ✓ இந்தப் புதிய விதிகளின்படி, அட்டவணை ‘A’விலிருந்த ஆக்சிடோசின், தற்போது ‘H1’க்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதன் காரணமாக, ஆக்சிடோசின் மருந்தை பரிந்துரைத்த மருத்துவரின் பெயர், முகவரி; நோயாளியின் பெயர், முகவரி; மருந்து மற்றும் அளவு உள்ளிட்டவற்றை குறிக்க தனிப்பதிவேட்டை சில்லறை விற்பனையாளர் வைத்திருத்தல் வேண்டும்.

- ✓ இப்பதிவேடுகள் 3 ஆண்டுகள் வரை பராமரிக்கப்பட வேண்டும் மற்றும் ஆய்வுக்காக சமர்ப்பிக்கும் நிலையில் இருக்கவேண்டும்.

- ✓ ‘ஆக்சிடோசின்’ என்பது இயற்கையாக உற்பத்தியாகக்கூடிய ஒரு ஹார்மோன் ஆகும். இது பேறுகாலங்களில் கருப்பை சுருங்கி விரிதலுக்கும், தாய்மார்களின் பால் சுரப்பிற்கும் உதவி புரிகிறது. ஆனால், விவசாயிகள் தங்களுக்கு விருப்பமான நேரத்தில் கால்நடைகளுக்கு பால் சுரப்பு ஏற்படவேண்டும் என்பதற்காக அவற்றுக்கு இந்த ஹார்மோனை உட்செலுத்துவதால், பால் உற்பத்தித்துறையில் இது தவறாக பயன்படுத்தப்படுகிறது.

- ✓ மேலும் பரங்கி, தர்பூசணி, கத்தரி, சுரைக்காய் மற்றும் வெள்ளரி உள்ளிட்ட காய்கறிகள் மற்றும் பழங்களின் அளவை அதிகரிப்பதற்காகவும் இது தவறாக பயன்படுத்தப்படுகிறது.

6.கோப்பர்னிக்கஸ் திட்டத்தின் கீழ் ஏவப்பட்டுள்ள காற்றுணர்வி (Wind-Sensing) செயற்கைக் கோளான “Aeolus”, எதன் கூட்டுத் திட்டமாகும்?



[A] ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐரோப்பிய விண்வெளி நிறுவனம்

[B] இஸ்ரோ மற்றும் ஜாக்சா

[C] நாசா மற்றும் இஸ்ரோ

[D] ரோஸ்கோஸ்மோஸ் மற்றும் இஸ்ரோ

- ✓ உலகளவில் காற்றின் வேகம் மற்றும் ஈரப்பதத்தினை துல்லியமாக அறிந்து தெளிவான கால நிலை முன்னறிவிப்பை வெளியிடுவதற்காக “Aeolus” எனும் செயற்கைக்கோளை ஐரோப்பிய விண்வெளி நிறுவனம் பிரஞ்சு கயானாவிலிருந்து ஏவியுள்ளது. இந்த செயற்கைக்கோள் புவிக்கு மேலே 320 கி.மீ., உயரத்தில் நிலைநிறுத்தப்பட்டுள்ளது.

- ✓ கோப்பர்னிக்கஸ் திட்டத்தின் ஒருபகுதியாக இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. சுற்றுச்சூழல் சேதத்தை கண்காணிக்கவும், பேரிடர் காலங்களில் மீட்பு நடவடிக்கைகளில் உதவுவதற்காகவும் வேண்டி, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐரோப்பிய விண்வெளி நிறுவனத்தால் இத்திட்டம் இணைந்து செயல்படுத்தப்பட்டுள்ளது.

- ✓ கிரேக்க புராணங்களில் காற்றை ஆட்சி செய்யும் ஓர் அரசனின் பெயர்தான் இந்த ‘எயோலஸ்’. இது விண்வெளியிலிருந்து உலகளாவிய காற்றின் பாங்குகளை அளவிட உதவும் மேம்பட்ட லேசர் அமைப்பான டாப்ளர் காற்று LIDAR’ஐ கொண்டுள்ளது. இதனை ஏர்பஸ் நிறுவனம் தயாரித்துள்ளது.

**7.** அண்மையில் காலமான விஜய் சவன், பின்வரும் எந்த திரைத்துறை பிராந்தியத்துடன் தொடர்புடையவர்?

[A] மராத்தி

[B] ஒடியா

[C] தெலுங்கு

[D] கன்னடா



- ✓ நகைச்சுவை கதாபாத்திரங்களுக்காக அறியப்பட்ட மூத்த மராத்தி நடிகரான விஜய் சவன் (63), ஆகஸ்ட் 24'ல் மும்பையில் காலமானார். 350-க்கும் மேற்பட்ட படங்களில் இவர் நடித்துள்ளார்.

**8.** தனது ஸ்டெர்லைட் ஆலையை மூடியது தொடர்பாக, வேதாந்தாவின் முறையீட்டில் முடிவு எடுப்பதற்கு, தேசிய பசுமை தீர்ப்பாயம் எந்தக் குழுவை அமைத்துள்ளது?

[A] AK கோயல் குழு

[B] அருணா சுந்தரராஜன் குழு

[C] MS சிவன் குழு

[D] SJ வசீப்தர் குழு




- ✓ தூத்துக்குடியில் உள்ள ஸ்டெர்லைட் தாமிர ஆலையை ஆய்வுசெய்ய ஓய்வுபெற்ற பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர்நீதிமன்ற நீதிபதியான SJ வசீப்தர் தலைமையில் 3 பேர்கொண்ட குழு அமைத்து தேசிய பசுமை தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது. இக்குழு ஸ்டெர்லைட் தாமிர ஆலை மற்றும் சுற்று வட்டாரப்பகுதிகளில் நேரில் சென்று ஆய்வுசெய்யும். மேலும், இது தொடர்பான தொழில்நுட்ப தகவல்களையும் ஆராயும்.
- ✓ இக்குழு, 6 வாரங்களில் ஆய்வுகளை முடித்து அறிக்கையை சமர்ப்பிக்கும். அண்மையில் ஆகஸ்ட் 9 அன்று ஸ்டெர்லைட் ஆலையின் நிர்வாக அலகு செயல்படுவதற்கு பசுமை தீர்ப்பாயம் அனுமதி அளித்தது. மேலும், மாவட்ட தலைமை நீதிபதி கண்காணிப்பில், ஆலையின் உற்பத்தி அலகு செயல்படாமல் இருப்பது உறுதிசெய்யப்பட்டது.
- ✓ 2013 மார்ச்சில் ஸ்டெர்லைட் ஆலையில் ஏற்பட்ட விஷவாயுக்கசிவால் ஒருவர் இறந்தது மற்றும் பலர் காயமடைந்தது வெட்ட வெளிச்சத்திற்கு வந்தபின், அப்போதைய தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ. ஜெயலலிதா, ஸ்டெர்லைட் நச்சு ஆலையை மூட உத்தரவிட்டார்.

**9.** “No Spin” என்ற நூல், எந்த கிரிக்கெட் வீரரின் சுயசரிதமாகும்?



[A] அனில் கும்லே

[B] முத்தையா முரளிதரன்

[C] ஷேன் வார்ன்

[D] பிஷன் சிங் பேடி

✓ “No Spin” என்ற நூல், கிரிக்கெட் வீரர் ஷேன் வார்னின் சுயசரிதமாகும். இது வரும் அக்டாபர் 30 அன்று வெளியிடப்படவுள்ளது. இந்த நூல், வார்ன் குறித்த அனைத்து கேள்விகளுக்கும் விடை அளிக்கும். கிரிக்கெட் வீரரும், தொலைக்காட்சி தொகுப்பாளருமான மார்க் நிக்கோலசின் நினைவுக்குறிப்புகளுடன் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

✓ கிரிக்கெட் வரலாற்றில் சிறந்த பந்துவீச்சாளர்களுள் ஒருவராக கருதப்படும் ஷேன் வார்ன், 1992’ம் ஆண்டில் தனது முதல் டெஸ்ட் போட்டியில் விளையாடினார். மேலும், சர்வதேச அளவில் அவர் 1000 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.

**10.** பெருவெள்ளத்தால் பேரழிவுக்கு உள்ளான கேரளாவின் கலாச்சார பாரம்பரியத்தை மீட்பதற்கான ஒரு திட்டத்தை, நினைவுச்சின்னங்கள் மற்றும் களங்களுக்கான சர்வதேச அவை (ICOMOS) தொடங்கியுள்ளது. ICOMOS’ன் தலைமையகம் எங்குள்ளது?

ICOMOS
international council on monuments and sites

[A] ஜெனிவா

[B] பாரிஸ்

[C] லண்டன்

[D] நியூயார்க்

✓ பெருவெள்ளத்தால் பேரழிவுக்கு உள்ளான கேரளாவின் வளமான கலாச்சாரம் மற்றும் பாரம்பரியமிக்க கட்டிடங்களின் சேதத்தை மதிப்பீடு செய்வதற்காக, “கேரளா பாரம்பரிய மீட்பு திட்டத்தை” நினைவுச்சின்னங்கள் மற்றும் களங்களுக்கான சர்வதேச அவை தொடங்கியுள்ளது. கேரளாவில் வெள்ளத்தால் சேதமடைந்த கலாச்சார பாரம்பரியத்தை அவசரமாக மீட்பதற்கான ஒரு மேடையை அமைக்கும் முயற்சியை இத்திட்டம் முன்னெடுக்கிறது.

- ✓ இது சேதமடைந்த கட்டிடங்கள், அருங்காட்சியக சேகரிப்புகள், கலாச்சார கலைப்பொருட்கள், நூலகங்கள், ஆவணக்காப்பகங்கள் போன்றவற்றின் தகவல்களை சேகரிப்பதற்காக பேஸ்புக் பக்கம் ஒன்றை உருவாக்கியுள்ளது.
- ✓ ICOMOS என்பது பயிற்சி, தகவல், ஆராய்ச்சி, ஒத்துழைப்பு & ஆலோசனை திட்டங்கள் மூலம் உலகளாவிய கலாச்சார பாரம்பரியத்தை பாதுகாப்பதற்காக அர்ப்பணிக்கப்பட்ட ஓர் அரசு சாரா அமைப்பாகும். இதன் தலைமையகம் பாரிசில் உள்ளது. உலக மரபுக்களங்கள் தொடர்பில் இந்த அமைப்பு UNESCO-வுக்கு ஆலோசனைகளை வழங்கிவருகிறது.

## இன்றைய தமிழக நடப்பு நிகழ்வுகள்

- ✓ சென்னையை அடுத்த வண்டலூர் உயிரியல் பூங்காவையொட்டி, 20 ஏக்கர் பரப்பளவில், “வன மரபியல் வள மரப்பூங்கா” திறந்துவைக்கப்பட்டுள்ளது.
  - கிழக்கு, மேற்குத் தொடர்ச்சி மலைத்தொடர்களில் உள்ள 300 அரிய வகை மரங்களை கொண்டு 20 ஏக்கர் பரப்பில் ரூ.2 கோடி செலவில் இந்த மரப்பூங்கா உருவாக்கப்பட்டுள்ளது.